


கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் படி விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பல்வேறு கழகப் பணிகள் குறித்து பேசினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்க பாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப்பாராஜ், சாகுல் ஹமீது, துணைச் செயலாளர் ஆர்.வி.கே.துரை , அருப்புக்கோட்டை நகர செயலாளர் ஏ.கே.மணி, இளைஞரணி பாபுஜி, சேர்மன் தங்கம், ரவி கண்ணன், மாவட்ட மகளிர் அணி சுமதி ராமமூர்த்தி, ராஜபாளையம் சேர்மன் பவித்ரா சியாம், நெசவாளர் அணி பழனிச்சாமி, ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர செயலாளர் பாண்டியன், ஒன்றிய செயலாளர் முனியாண்டி, இரா.தங்க மாங்கனி, திருவில்லிபுத்தூர் நகரச் செயலாளர் அய்யாவு பாண்டியன், சாத்தூர் ஒன்றிய செயலாளர் கடற்கரை ராஜ், நகரச் செயலாளர் குருசாமி, மாவட்ட நகர ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட கழக அணியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 146–வது பிறந்தநாள் – சமூக நீதி நாளை யொட்டி கத்திபாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுடன் இணைந்து பெரியாரின் திருஉருவப்படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து, சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றார். அருகில் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா- நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை. செப். 19-

சிவகங்கை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்தநாள் மாவட்டம் முழுவதும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலைகள் அணிவித்தும் திரு வுருவப்படம் அலங்கரிக்கப் பட்டும் இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

**1.திருப்பத்தூர்**

திருப்பத்தூர் பேரூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் மதுரை சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான கேஆர் .பெரிய கருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அண்ணாவிற்கு புகழாரம் சூட்டினார் .அதை தொடர்ந்து பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்தி கேயன், ஒன்றிய குழு தலைவர் ஒன்றிய செயலாளர் எஸ். .சண்முக வடிவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா,, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் மெ.காளிமுத்து, ஆய்வக அணி சன்சீமான்சுப்பையா, நிர்வாகிகள் உதய சண்முகம், பொருளாளர். ஏ. எம். கண்ணன், மலை. ராதாகிருஸ்ணன், ,மாங்குடி பெரி.முருகன், ராம. ரவி. திருநாவுக்கரசு , பிள்ளையார்பட்டி வெள்ளைச்சாமி, பேருராட்சி மன்ற துணை தலைவர் கான்முகமது, ஷாஜகான், ஒன்றிய இளைஞரணி அணிப்பாளர் வைகை இளமாறன் , பிளாசா சேகர், புதுார் கண்ணன், இளைஞர் அணி பஷீர் ,ஒன்றிய துணைச்செயலாளர் முத்துகுமார், சுப்பிரமணியன் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள் முன்னதாகபஸ்நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு பேரறிஞர் அண்ணா சிலையை சென்றடைந்தது.

**2. சிவகங்கை**

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் நீதிமன்ற வாயில்முன்பாக உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர்கழகச் செயலாளர்சி.எம். துரை. ஆனந்த் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நகர்கழக நிர்வாகிகள் ஜெயகாந்தன், அ.அயூப்கான் வீனஸ் ராமநாதன், முரசொலி மதி, சரவணன் தகவல் தொழில் நுட்ப அணி சதீஷ், முத்துமணி, உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

**3.காரைக்குடி**

காரைக்குடியில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாநகர செயலாளர் துணை மேயர் என். குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மலர் மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து மாநகராட்சி மேயரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ். முத்துதுரை, நிர்வாகிகள் சொ. கண்ணன் ,சன் சுப்பையா, சேவியர்,தேவ தாஸ்,துரை. நாகராஜ், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**4. மானாமதுரை**

மானாமதுரையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர் கழக செயலாளர் க. பொன்னுசாமி தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் துரை. ராஜாமணி, எம்.அன்னா துரை, முன்னாள் எம். எல் .ஏ. எஸ். மாரியப்பன் கென்னடிஆகியோர் மலர்மாலை அணிவித்துமரியாதை செலுத்தினார் கள் .அதை தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதாஅண்ணாத்துரை, துணைத். தலைவர் அ.முத்துச்சாமி, நகராட்சி துணை தலைவர் பாலசுந்தர், ரவிச்சந்திரன், மயில்வாகனன், மகளிரணி சண்முகப்பிரியா,மாணவரணி கார்த்தி, அரிகிருஸ்ணன். சண்முகம், மூர்த்தி, பாஸ்கரன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**5.இளையான்குடி.**

இளையான்குடி வடக்கு ஒன்றியம் மற்றும் இளையான்குடி பேரூர் கழகத்தின் சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதியரசன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ . பேரறிஞர் அண்ணா திருவருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் பி.ஏ. நஜ்முதீன், துணை தலைவர் இபுராகீம்,கூட்டு றவு சங்க தலைவர் சுப.தமிழரசன், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், நிர்வாகிகள் வே.கருணாகரன், விவசாய அணி காளிமுத்து,சத்தியேந்திரன், வினோத், சண்முகம், சின்னத்தம்பி, காஜாமுதீன், இப்ராஹிம், உமர் கத்தார், மணி மொழியான் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சார்பில் சூராணத்தில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் வே.தமிழ் மாறன் தலைமையில் மலர் மாலை அணிவித்து இனிப் புகள் வழங்கப்பட்டது. தூய்மை பணியாளருக்கு நலத்திட்ட உதவிகள் வழங் கப்பட்டது. ரகுநாதன் என்ற கோபு, ஆரோக்கிய தாஸ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**6.காளையார் கோவில்**

காளையார் கோவில் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் பஸ்நிலையம் முன்பாக பேரறிஞர் அண்ணா திருவுருவப்படத்திற்கு ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான வே. ஆரோக்கியசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

**7.சிங்கம்புணரி**

பேரூர்ஒன்றிய கழகத்தின் சார்பில் அண்ணா மன்றத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு பேரூர் கழக செயலாளர் கதிர்வேல் தலைமையில்மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில், ஒன்றிய செயலாளர்கள் பூமணி, கே. பாலசுப்ரமணியன், நிர்வாகிகள் சிவபுரி சேகர், சிவக்குமார், மனோகரன், புகழேந்தி, பாஸ்கரன்ஏ.எல்.சந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

**8.திருப்புவனம்.**

திருப்புவனம் ஒன்றிய பேரூர் கழகத்தின் சார்பில் பேருந்து நிலையம் முன்பாக அலங்கரிக்கப் பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருப் படத்திற்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும், பேரூராட்சி மன்றத் தலைவருமானத.சேங்கை. மாறன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் திருமதி வசந்தி சேங்கைமாறன், பேரூராட்சி மன்ற ரகுமத்துல்லா கான், மீனவரணி அண்ணாமலை விவசாய அணி சேகர், ஈஸ்வரன், ராமலிங்கம், சுப்பிரமணியன், வெங்கடேசன், மகேந்திரன், ஒன்றிய இளைஞர் அணி அறிவுக்கரசு, ராஜு, கெங்குராமன், கோபால், முருகன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், கண்ணன், வேல்பாண்டி, பத்மாவதி முத்துக்குமார், ராமலட்சுமி பாலகிருஷ்ணன் சித்ராதேவி ஆறுமுகம் ,மற்றும்வார்டு செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

**9.தேவக்கோட்டை**

தேவக்கோட்டை நகரச் செயலாளர் பெரி . பாலா தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் அன்புச்செழியன், இளங்கோ, சரவணன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டம் முழுவதிலும் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படம் மலர் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.



திருப்புவனத்தில் ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் தலைமையில் கழகத்தினர் ஊர்வலமாகச் சென்று அண்ணா அவர்களின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வசந்திசேங்கைமாறன், நகர செயலாளர் நாகூர் கனி, பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், ஒன்றிய நிர்வாகிகள் ராமலிங்கம், சுப்பிரமணியன், வெங்கடேசன், மகேந்திரன், விவசாய அணி துணைத் தலைவர் சேகர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அறிவுக்கரசு, கெங்குராமன், ராசு, தேளி கோபால், முருகன், பேரூராட்சி மண்ற உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், கண்ணன், வேல்பாண்டி, பத்மாவதி முத்துக்குமார், ராமலட்சுமி பாலகிருஷ்ணன், சித்ரா தேவி, ஆறுமுகம், தொண்டர் அனி ராஜா, மீனவரணி அண்ணாமலை, தொ.மு.ச. பிச்சை மற்றும் வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### திருமங்கலம் முத்தப்பன்பட்டியில்

# முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி இரா.முத்தையா 2ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கல் – கழகத்தினர் – பொதுமக்கள் பங்கேற்பு!

மதுரை, செப் 19-

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி தே.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவு மண்டபத்தில் அவரது இரண்டாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்ச்சி வரும் 21ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் அமைச்சர் பெருமக்கள், கழகத்தினர், பொதுமக்கள் பெரும் திரளானோர் பங்கேற்க உள்ள நிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. அதன் விபரம்,

சேடப்பட்டி இரா.முத்தையா என்றழைக்கப்படும் முன்னாள் சபாநாயகரென்ற பெருமைக்குரியவர் கடந்த 1942 ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி பேரையூர் தாலுகா, சேடப்பட்டி தொகுதி, முத்தப்பன்பட்டி கிராமத்தில் ராமசாமி தேவர் சீதையம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக பிறந்தார்.

தமது பள்ளிப்படிப்பை பேரையூரில் உள்ள அரசு பள்ளியில் பயின்றவர், பின் 1961 ஆம் ஆண்டு மதுரை தியாகராசர் கல்லூரியில் கல்லூரி படிப்பை பயின்றார். கல்லூரிப் படிப்பின் போது பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்ட பெரும் பற்று காரணமாக தி.மு.க.வில் பணியாற்ற வேண்டும் என்ற மிகுந்த உணர்வோடு இளமையிலேயே கழகத்தில் தீவிர செயலாற்ற தொடங்கினார். மாணவர் தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடுடன் தம்மை ஐக்கியமாக்கி கொண்டு எல்லோரும் பாராட்டு வகையில் செயலாற்றினார். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் முன் நின்று நடத்தி வெற்றி கண்டு பல முறை சிறை சென்று பல்வேறு சிறைச்சாலைகளில் பல துயரங்களை அனுபவித்தார்.

1965இல் இந்தியாவே எதிர்நோக்கி வியப்புடன் பார்த்த மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மாணவர் தி.மு.க. சார்பில் தலைமையேற்று வழிநடத்தி போராட்டம் பல கண்டு அதிகமான நாட்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டார். இப்படி போராட்டத்திற்கு அஞ்சாமல் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உத்தரவினை முதற்கடமை என பாவித்து அயராது பாடுபட்டு அவர்களிடம் நட்பெயரும் பெற்றார்.

தமது கல்லூரி மாணவப் பருவத்தில் கழகப் பணியில் பெருமை கொள்ளும் வகையில் மாணவர்களை ஒன்றிணைத்து பல்வேறு போராட்டம் மற்றும் நகரங்கள், கிராமங்கள் தோறும் சென்று தீவிர செயலாற்றியதால் கழகத்தினராலும், மாணவர்களாலும் 1965 முதல் 1970 ஆண்டு வரை மாணவர் தலைவர் இரா.முத்தையா என்று பெருமையோடு அழைக்கப்பட்டார்.

மேலும் தமது சீறிய ஆற்றலினால் சேடப்பட்டி தொகுதியில் நான்கு முறை போட்டியிட்டு அத்தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். இதனால் அத்தொகுதி மக்களால் செல்லமாக சேடபட்டியார் எனவும், சேடப்பட்டி முத்தையா என்றும் அன்போடும் பாசத்தோடும் எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

சட்டமன்ற சபாநாயகராக பணியாற்றியதன் பயனாக சட்டமன்ற செயல்பாடுகளை நன்கு அறிந்து சட்டப்பேரவை தொடர்பான எந்த ஒரு ஊடக விவாதத்தில் விளக்கம் கேட்டாலும் சட்டப்பேரவையின் விதிகள் குறித்து விரல் நுனியில் வைத்திருந்து சட்டபூர்வமான வாதங்களை எடுத்துக் கூறும் ஆற்றல் மிக்கவர், தனது சொந்த தொகுதியான சேடபட்டியில் பட்டி தொட்டிகளில் எல்லாம் உள்ள கழகத்தினர் பொதுமக்கள் மத்தியில் தொகுதி மக்கள் பெயர்களை கூறி அவர்களுடன் அன்போடு உறவாடுவார், தோளில் தட்டி கொடுத்து உங்களில் நான் ஒருவன் என்று எளிமையாக நேரில் பழகும் குணம் கொண்டவர் என எல்லோராலும் பாராட்டு பெற்றவர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் நன்கு பழகி அவர்களிடம் அன்பும் பாசமும் பெற்று முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைக்கினங்க கழகத்தின் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளராக பதவி வகித்து சீரிய முறையில் செயலாற்றினார்.

நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பும் பாசமும் மரியாதையும் பெற்றவர் சேடப்பட்டி இரா.முத்தையா ஆவார். அவரது வழியில் அவரது புதல்வர் சேடப்பட்டி மு.மணிமாறன் கழகத்தின் ஒன்றிய செயலாளராக கழகப் பணியில் சிறப்பாக பணியாற்றி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மதுரை தெற்கு மாவட்ட செயலாளராகவும் கழக பணியாற்றி வருகின்றார்.

பல்வேறு சாதனை படைத்து கழகத்திற்கு அரும்பாடு பட்டு எல்லோராலும் சேடபட்டி இரா. முத்தையா என்றழைக்கப்பட்ட பெருமைக்குரியவர் தமது வாழ்நாள் இறுதி வரை கழகப் பணியாற்றி கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி இயக்கை எய்தினார்.

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு வருகிற 21.09.2024ந்தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை வரை அவரது சொந்த ஊரான முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள அவரது நினைவு மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் அமைச்சர் பெருமக்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்க உள்ளனர்.

மேலும் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

# ஜம்மு காஷ்மீர் தேர்தல் - விறுவிறுப்பான வாக்குப்பதிவு!

ஜம்மு, செப். 19-

பத்து ஆண்டுகளுக்கு பிறகு ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று வருகிறது. இதன் முதல்கட்ட வாக்குப்பதிவு 24 தொகுதிகளில் நேற்று (செப்.18) காலை 7 மணி தொடங்கி விறுவிறுப்பான வாக்குப் பதிவு நடைபெற்றது.

முதல்கட்ட வாக்குப்பதிவில் சுமார் 23.27 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை வாக்குப்பதிவு தொடங்கியது முதலே வாக்காளர்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். கடுமையான குளிர் நிலவி வரும் சூழலிலும் எவ்வித சர்ச்சையும், பிரச்சினையும் இல்லாமல் அமைதியாக வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

தேர்தல் ஆணையத்தின் தகவல்படி, கிஷ்த்வாரில் 56.86%, தோடாவில் 50.81%, ராம்பனில் 49.68%, சோபியானில் 38.72%, குல்ஹாமில் 39.91%, ஆனந்த்நாக்கில் 37.90% மற்றும் புல்வாமாவில் 29.84% வாக்குகள் பதிவாகியுள்ளன. காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வரும் வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைய இருக்கிறது.

60% வாக்குப்பதிவு எதிர்ப்பார்ப்பு: இதனிடையே ஜம்மு காஷ்மீரில் அமைதியான முறையில் வாக்குப்பதிவுகள் நடைபெறுவதாக மாநில தேர்தல் தலைமை தேர்தல் அதிகாரி பி.கே.போல் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், “தேர்தல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மக்கள் வாக்களிக்க வரும் ஆர்வத்தைப் பார்க்கும் போது அதிக அளவில் வாக்குப்பதிவாகும் என்று தோன்றுகிறது. 60 சதவீதம் வாக்குகள் பதிவாகலாம் என எதிர்பார்க்கிறோம். வாக்குப்பதிவு சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடந்து வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.

மக்களை வாக்களிக்க வருமாறு அழைப்பு விடுத்துள்ள மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “ஜம்மு காஷ்மீரில் உள்ள எனது சகோதர, சகோதரிகளே. முதல்கட்ட வாக்குப்பதிவு நடந்து வருகிறது. நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக ஒரு மாநிலத்தின் மாநில அந்தஸ்த்து பறிக்கப்பட்டு யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. இது உங்களின் அனைத்து அரசியலமைப்பு உரிமைகளை மீறும் செயலாகும், ஜம்மு காஷ்மீருக்கான அவமானம் ஆகும். இண்டியா கூட்டணிக்காக நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளும், உங்கள் உரிமைகளைத் திரும்பக் கொண்டு வரும், வேலைவாய்ப்பை வழங்கும், பெண்களை வலிமையாக்கும், அநீதியின் சகாப்தத்தில் இருந்து உங்களை வெளியே கொண்டுவரும், ஜம்மு காஷ்மீரை மீண்டும் செழிப்பாக்கும்” என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு காந்திநகர் பகுதி செயலாளர் பரமசிவம் தலைமையில் புரவலர் துரைசிங்காரம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தயாநிதி, காட்பாடி நகரமைப்பு சங்க துணைத் தலைவர் தேவசுந்தரம், மாநகர துணைச் செயலாளர் ஒய்.தேவநேசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் லதா, விஜய குமாரி, வட்ட கழகச் செயலாளர் அரிகிருஷ்ணன், கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.